# வட மாகாண முஸ்லிம்களின் எதிர்காலம் பற்றி 26.07.1992 அன்று கொழும்பு இஸ்லாமிய கல்வி நிலையத்தில் நடைபெற்ற மாநாட்டுச் சிந்தனைகள்


தொகுப்பும் ஆய்வும்
கலாநிதி S.H. ஹஸ்புல்லா,
ஜனாப் S.M.A. நியாஸ்,
ஜனாப் M.I. அஸதுல்லா



பேராதனைப் பல்கலைக்கழகம்.
பேராதனை.
30. 07. 1992.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VADA MAHANA MUSLIMKALIN ETHIRKALAM PATRI 26.07.1992 ANDRU COLUMBU ISLAMIYA KALVI NILAYATHTHIL NADAIPETRA MANATTUCH CHINTHANAIKAL (TAIML)

THOUGTS ON THE FUTURE OF THE MUSLIMS OF THE NORTHERN PROVINCE:

A STUDY OF THE VIEWS EXPRESSED BY SPEAKERS AT A CONFERENCE HELD AT THE CENTRE FOR ISLAMIC STUDIES, COLOMBO ON 26TH JULY 1992

**COMPILED BY.**
DR. S.H. HASBULLAH,
S.M.A. NIYAS,
M.I. ASADULLAH.

ALL RIGHTS RESERVED.

FIRST PUBLISHED.
JULY, 1992.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

பக்கம்

1. அறிமுகம் 04

2. மாநாட்டின் நோக்கம் 05

3. மாநாட்டுக் கருத்துக்களைத் தொகுத்தலும் ஆய்வு செய்தலும் பற்றி 06

4. மாநாட்டில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள். 07

4.1. அகதிகளாக வாழ்வதில் உள்ள பிரச்சினைகளும் அதற்கு உடனடி முக்கியத்துவம் கொடுக்கவேண்டியதன் அவசியமும் 07

4.2. வட மாகாண தாயகத்திற்குத்திரும்பிச் செல்லல் 08

4.3. தாயகம் திரும்பிச் செல்லும் வரை. 09

4.4. வட மாகாண முஸ்லிம்களுக்கான அரசியற் தீர்வு 11

4.4.1. வட மாகாண முஸ்லிம்களுக்கான சுதந்திரமான குரல் 11

4.4.2. வட மாகாண முஸ்லிம்களுக்கான அமைப்பும் தலைமைத்துவமும் 12

4.4.3. L.T.T.E யினருடன் வட மாகாண முஸ்லிம்கள் நேரடியாகப் பேசுதல். 14

4.4.4. வடக்கு கிழக்கு இணைப்பு அல்லது இணைப்பின்மைபற்றி 14

5. எவ்வகையான மன வெளிப்பாட்டை மாநாட்டுக் கருத்துக்கள் காட்டுகின்றன. 15

6. இனப் பிரச்சினை தீர்வு சம்பந்தமான தேசிய அரசியற் கண்ணோட்டமும் வட மாகாண முஸ்லிம்களுக்கான அரசியற் தீர்வு பற்றிய ஒப்பு நோக்கும். 15

7. வட மாகாண முஸ்லிம்களின் மையப் பிரச்சினை. 17

8. வட மாகாண முஸ்லிம்கள் பற்றிய அணுகுமுறையில் மாற்றம் வேண்டுமா ? 18

9. முன்னுரிமை ரீதியாக வட மாகாண முஸ்லிம்களின் பிரச்சினை 19

10. முடிவுரை 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# வட மாகாண முஸ்லிம்களின் எதிர்காலம் பற்றி 26.07.1992 அன்று கொழும்பு இஸ்லாமிய கல்வி நிலையத்தில் நடைபெற்ற மாநாட்டுச் சிந்தனைகள்

## 1. அறிமுகம்

வட மாகாணத்திற் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் அனைவரும் 1990ம் ஆண்டு ஒக்ரோபர் மாத இறுதிப் பகுதியில் L.T.T.E தமிழ்ப் பயங்கரவாதிகளினால் சொத்துக்கள் அனைத்தும் பறிக்கப்பட்ட நிலையில் வட மாகாணத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டார்கள். இவ்வாறு வெளியேற்றப்பட்ட சுமார் 75,000 வட மாகாண முஸ்லிம்கள் இன்றுவரை அகதிகளாகத் தற்காலிக ஓலை குடிசைகளைக் கொண்ட அகதிமுகாம்களில் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் வரையறுக்க முடியாத கஷ்டங்களுடனும் மன வேதனையுடனும் வாழ்கின்றார்கள். இவ்வகதிமுகாம்கள் புத்தளம், அநுராதபுரம், குருநாகல் மாவட்டங்களிலும், கொழும்பு நகரத்திலும், இலங்கையின் ஏனைய சில பிரதேசங்களிலும் அமைவுற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட மாகாண முஸ்லிம்களின் தற்போதைய அகதி நிலைமை தொடர்பான பிரச்சினைகள் பற்றியும், மீளக்குடியேறுதல் பற்றியும் கடந்த ஒன்றரை ஆண்டுகளாகப் பல கூட்டங்கள் கூட்டப்பட்டன. குறிப்பாகக் கடந்த சில வாரங்களில் இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வொன்றில் வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் நிலைப்பாடு என்ன ? என்ற கண்ணோட்டத்தில் பல மாநாடுகள் கூட்டப்பட்டன. இம்மாநாடுகளில் வட மாகாண முஸ்லிம்களின் அரசியல் நிலைப்பாடு எவ்வாறானதாக இருக்கலாம்? எப்படி அமைய வேண்டும் ? என்ற கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டன.

## 2. மாநாட்டின் நோக்கம்

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பொறியியலாளர் A.L. புர்ஹானுதீன் அவர்களால் வட மாகாண முஸ்லிம்களின் உண்மையானதும் சுதந்திரமானதுமான அரசியல் நிலைப்பாடு என்ன ? என்பதைக் கண்டறியும் நோக்கத்தோடு இம்மாநாடு கூட்டப்பட்டது. இம்மாநாட்டை ஒழுங்கு செய்த பொறியியலாளர் A. L. புர்ஹானுதீன் மன்னார் பெரியமடுவைச் சேர்ந்த M.M. அமீன் அவர்களைத் தலைமைதாங்கி கூட்டத்தை நடாத்தும்படி வேண்டிக்கொண்டார். தலைவர் M.M. அமீன் தனது உரையில் கட்சிச் சார்புக்கப்பால் சுதந்திரமாக வடமாகாண முஸ்லிம்களின் இன்றைய நிலைப்பாட்டை அறிவது தான் இம்மாநாட்டின் நோக்கமெனக் குறிப்பிட்டார்.

இம்மாநாட்டில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் சரியான முறையில் தொகுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு மக்கள் முன்னிலையில் ஓர் அறிக்கையாக முன்வைக்கப்படும் எனவும் இவ்வறிக்கை வட மாகாண முஸ்லிம்களின் மத்தியில் மேலும் இது சம்பந்தமான அரசியல் சிந்தனை வளர்ச்சி பெற உதவும் எனவும் தலைவர் குறிப்பிட்டார். இம்மாநாட்டிற் கூறப்படும் கருத்துக்களைத் தொகுத்து ஆய்வு செய்து அறிக்கையாக வெளிக்கொணர்வதற்கு மன்னார் எருக்கலம்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராதனைப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S.H. ஹஸ்புல்லா அவர்களும், அவரது உதவியாளர்களும் இச்சபைக்குச் சமூகம் தந்துள்ளார்கள் என்றும் குறிப்பிட்டார்.

## 3. மாநாட்டுக் கருத்துக்களைத் தொகுத்தலும் ஆய்வு செய்தலும் பற்றி.

இம்மாநாட்டில் வட மாகாணத்தைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். இப்பிரதிநிதிகள் வட மாகாணத்தின் எல்லா மாவட்டங்களையும் பிரதி நிதித்துவப்படுத்தினார்கள். இம்மாநாட்டில் பங்கு பற்றிய வர்களில் அதிகமானோர் கொழும்பு நகரிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் வாழ்கின்ற வட மாகாண முஸ்லிம் அகதிகளாவர். அதே நேரத்தில் புத்தளம், அநுராதபுரம், குருநாகல் முதலிய இடங்களைச் சேர்ந்த அகதி முகாம்களிலிருந்தும் பிரதிநிதிகள் சமூகமளித்திருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் இம்மாநாட்டுக்கு வட மாகாணத்தைச் சேர்ந்த உலமாக்கள், கல்விமான்கள், சமூக சேவையாளர்கள் முதலியோரும் வருகை தந்திருந்தார்கள். பார்வையாளர்களாகக் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சில முஸ்லிம்கள் அமர்ந்திருந்ததனையும் அவதானிக்க முடிந்தது.

மொத்தமாக இக்கூட்டத்தில் 25 பேர் தமது கருத்துக்களைத் தெரிவித்தார்கள். வட மாகாண முஸ்லிம்களின் அகதிநிலைப் பிரச்சினைகள், மீள்குடியேற்றம் சார்ந்த பிரச்சினைகள், வட மாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பாக அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகள் போன்ற தலைப்புக்களில் இப்பேச்சாளர்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்தனர். இவையாவும் நாடாவில் பதியப்பட்டன. அத்துடன் S.H. ஹஸ்புல்லா, S.M.A. நியாஸ், M.I. அசதுல்லா ஆகிய நாம் இப்பேச்சுக்களைத் தொகுத்து ஆய்வதற்கென சமூகமளித்ததுடன் ஒவ்வொரு பேச்சின் சாராம்சங்களையும் தொகுத்துக் கொண்டோம். இப்பேச்சுக்களை தொகுத்து ஆராய்ந்து இவ்வறிக்கையில் சமர்ப்பிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேநேரத்தில் தனிப்பட்ட ஒவ்வொருவரது பேச்சுக்களும் தனித்தனியாக எழுதப்பட்டுப் பின்னர் நூல்வடிவிற் கொண்டுவரப்படும் என்பதும் நாடாக்களில் பதியப்பட்ட பேச்சுக்கள் இலக்கமிடப்பட்டு ஆர்வமுள்ளவர்களின் கிடைப்பனவுக்காக வைக்கப்படும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## 4. மாநாட்டில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள்,

வடமாகாணத்தைச் சேர்ந்த கல்விமான்கள், உலமாக்கள், அரசியல்வாதிகள், இஸ்லாமிய இயக்கங்களைச் சேர்ந்தவர்கள், சமூக சேவையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாமரர்கள் உட்பட மொத்தமாக 25 பேர் தமது கருத்துக்களைத் தெரிவித்தார்கள். இக்கருத்துக்களின் சாராம்சம் பின்வரும் உப தலைப்புக்களில் விளக்கப்படுகின்றது.

### 4.1 அகதிகளாக வாழ்வதில் உள்ள பிரச்சினைகளும் அதற்கு உடனடி முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதன் அவசியமும்.

இம்மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அநேகர், வட மாகாணத்தில் கௌரவமாக வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் இன்று நாளாந்த உணவுக்கும் ஏனைய வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளுக்குமாகப் போராடிக் கொண்டிருக்கின்ற தன்மை பற்றியும் இவ்வகதி வாழ்க்கையோடு தொடர்பான ஏனைய பிரச்சினைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்துப் பேசினார்கள். உணவுப் பிரச்சினை பற்றிக் குறிப்பிட்டபோது தமக்குக் கிடைக்கும் உலர் உணவு நிவாரணம் போதாதென்றும் அத்துடன் நீர்கொழும்பு, புத்தளம் ஆகிய பிரதேசங்களில் கடந்த மூன்று மாதங்களாக அகதி நிவாரணம் கொடுக்கப்படவில்லை என்றும், மக்கள் தமது நாளாந்த உணவுத்தேவைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள் எனவும் குறிப்பிட்டார்கள். உரையாற்றிய சகோதரர்களில் ஒருவர் கடந்த ஹஜ்ஜுப் பெருநாளின்போது பல முகாம்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த முஸ்லிம் அகதிகள் பகலுணவுக்கே வசதியற்ற நிலையில் இருந்தார்கள் எனவும் கூறி உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதில் மக்கள் படும் கஷ்டங்களை எடுத்துக் கூறினார்.

அகதிகளின் ஏனைய பிரச்சினைகள் பற்றிய கருத்துக்களில் தமது சிறார்களின் எதிர்காலம், அச்சிறார்களின் கல்வி பெருமளவு பாதிக்கப்படுவதால், ஏற்படும் சமூகச் சீர்கேடுகள் பற்றியும் அச்சம் தொனிக்கும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. எமது எதிர்காலச் சந்ததியினராவது கௌரவமாக வாழவேண்டுமென்ற ஆர்வம் வெகுவாக அக்கருத்துக்களிற் காணப்பட்டன. கல்வியும், சமய உணர்வும், சமூக கலாச்சாரப் பண்பாட்டு ஒழுக்கங்களும் இளஞ்சந்ததியினருக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் ஆனால் அகதி நிலையிலான வாழ்க்கை அதற்கு எதிர் முரணானதாகக் காணப்படுகின்றது என்றும் குறிப்பிட்டனர். அகதிச் சமுதாயத்தில் உருவாகி வருகின்ற சீர்கேடுகளைத் தெரிந்தும் அதற்கான தீர்வினைக் காணமுடியாதவர்களாக வடக்கு மாகாண முஸ்லிம்கள் இருக்கின்றோம். என்றும் குறிப்பிட்டனர்.

## 4.2 வட மாகாணத் தாயகத்துக்குத் திரும்பிச் செல்லல்.

பலவந்தமாக அகதிகளாக்கப்பட்டபோது, சொத்து, சுகம் யாவற்றையும் இழந்து விட்ட நிலையிலும், ஒன்றரை வருடங்களாக அகதிகளாக வாழ்ந்து விட்ட நிலையிலும், தமது சொந்த இடங்களுக்கு உடனடியாகத் திரும்பிச் செல்ல முடியாது என்று அறிந்திருக்கின்ற நிலையிலுங்கூட, கருத்துத் தெரிவித்தோர் தமது குடியிருப்புக்களுக்கும் வீடுகளுக்கும் தாம் பிறந்து வளர்ந்த பிரதேசங்களுக்கும் திரும்பிச் செல்வதே தமது குறிக்கோள் என்பதைத் தெட்டத்தெளிவாக வலியுறுத்தினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கருத்துக்களை யாழ்ப்பாணநகரைச் சேர்ந்த பிரதிநிதிகள் அதிக அழுத்தம் கொடுத்துக் கூறியதை நோக்குகின்றபோது தாம் பாரம்பரியமாக வாழ்ந்த பிரதேசமே தமது இல்லம், வாழிடம் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டிருக்கின்றார்கள் என்று கருத முடிகின்றது. தாயகம் திரும்புவதை பற்றி முல்லைத்தீவைச் சேர்ந்த சகோதரர் கருத்துத் தெரிவித்த போது துரத்தியடிக்கப்பட்ட வட மாகாண முஸ்லிம்களின் மீளக்குடியமர்வு பின்வரும் அடிப்படைகளில் அமைய வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

(அ) எந்தவிதமான முன்னிபந்தனைகளுமில்லாது நாம் வடக்கில் குடியேறத் தமிழர்கள் எம்மை அனுமதிக்க வேண்டும்.

(ஆ) நாம் வெளியேற்றப்படுவதற்கு முன் எங்கெங்கு வாழ்ந்தோமோ அந்தந்தக் குடியிருப்புக்களில் வாழ்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

(இ) வடமாகாணத்தைச் சேர்ந்த சக பிரஜைகள் என்ற அடிப்படையில் வடமாகாணத்தில் நிலம், நீர், ஏனைய வளங்களை நாம் சுதந்திரமாகப் பயன்படுத்துவதற்கு எவ்விதமான தடையும் இருக்கக் கூடாது.

## 4.3 தாயகம் திரும்பிச் செல்லும் வரை.

வட மாகாணத்திற்குத் திரும்பிச் செல்வது எப்போது என நிச்சயமற்ற நிலை காணப்படுவதால் திரும்பிச் செல்லும் வரை தற்காலிகக் குடியேற்றத் திட்டங்களை அமைத்துக் கொள்வது பற்றி அகதிகளாகிய நாம் சிந்திக்க வேண்டும் என்ற கருத்து இம்மாநாட்டில் முன்வைக்கப்பட்டது. இக்கருத்தினைக் குறிப்பாக யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சகோதரர்களும் முல்லைத்தீவு விடத்தல்தீவு முதலிய இடங்களைச் சேர்ந்த சகோதரர்களும் வற்புறுத்தினார்கள். அகதிகளுக்கான தற்காலிக குடியேற்றத் திட்டங்களை வற்புறுத்திய சகோதரர்கள் அவ்வகையான குடியேற்றத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டங்கள் இன்று அகதி முகாம்களில் ஏற்பட்டுவரும் சமூக, சமயச் சீரழிவுகளை நிவர்த்தி செய்யும் எனக் கூறினார்கள். விடத்தல்தீவைச் சேர்ந்த சகோதரர் ஒருவர், அரசாங்கம் பல கிராம எழுச்சித் திட்டங்களை இன்று உருவாக்கி வருகின்றபோது வட மாகாண முஸ்லிம் அகதிகளுக்கெனக் கிராம எழுச்சித் திட்டம் ஒன்றினை ஏன் உருவாக்கக் கூடாது என்ற கேள்வியை முன்வைத்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சகோதரர் ஒருவர் யாழ்ப்பாண முஸ்லிம்கள் அகதிகளாக வெளியேற்றப்பட்டதன் பின்னர் ஓரிடத்தில் ஒன்றாகக் குடியேறியிருந்தால் உற்றார் உறவினர் ஊரவர்களோடு ஒன்றாக வாழ்ந்திருக்கலாமே என்றும் எமது யாழ்ப்பாண முஸ்லிம்களுக்கென குடிசையிலாயினும் ஒரு பாடசாலை அமைத்து அதற்கு "ஒஸ்மானியா மத்திய மகா வித்தியாலயம்" எனப் பெயரிட்டு எமது ஊர் ஆசிரியர்களைக் கொண்டு எமது சிறாருக்கு கல்வி புகட்டுவதோடு இன ஐக்கியத்தோடு வாழ்ந்திருக்கலாமே என்றும் அதனை ஆரம்பத்திலேயே செய்யத் தவறி விட்டோமே என்றும் அங்கலாய்த்தார்.

முல்லைத்தீவைச் சேர்ந்த இன்னொரு சகோதரர் புதிய குடியேற்றங்கள் அகதிகளுக்கென அமைக்கப்படவேண்டும், ஆனால் அது தற்காலிக குடியேற்றமாக மட்டுமே இருக்க வேண்டும். ஒவ்வொரு ஊர்மக்களும் ஒன்றாக சேர்ந்து வாழும் தனித்தனியிடங்களாக அவை இருக்க வேண்டும். எமது மக்களோடும் ஊறாரோடும் நாம் ஒன்றாக வாழ வேண்டும். இதன் மூலமாக இவ்வகதி வாழ்க்கை தந்துவிட்ட சீர்கேட்டிலிருந்து எமது எதிர்காலச் சந்ததியினரைப் பாதுகாக்கலாம் எனவும் குறிப்பிட்டார்.

இச்சந்தர்ப்பத்தில் மன்னாரிலும் வவுனியாவிலும் வடமாகாண முஸ்லிம்களிற் சிலர் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்பு உருவான பிரச்சினைகள் பற்றியும் பலர் கருத்துக்களைத் தெரிவித்தனர். வவுனியா மாவட்டத்தில் தற்போது மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பட்டானிச்சூர் சகோதரர் மீள்க்குடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேற்றத்தினால் பட்டானிச்சூர் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளைக் குறிப்பிட்டார். வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் S.M. அபூபக்கர் பாதுகாப்பு ரீதியாக திட்டமிடப்படாத மீள்குடியேற்றங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் குறிப்பிட்டார்.

## 4.4 வடமாகாண முஸ்லிம்களுக்கான அரசியல் தீர்வு

இம்மகாநாட்டில் பங்குபற்றிய சகோதரர்கள் வடமாகாண முஸ்லிம்கள் இன்று அநாதைகளைப்போல் காணப்படுகிறார்கள் என்றும் இம்முஸ்லிம்களின் நலன்களைச் சிந்தித்துச் செயலாற்றக்கூடிய தலைவர்கள் இல்லையென்றும் அகதிகளின் எதிர்கால நிலைமைபற்றி உள்ளூர், தேசிய, சர்வதேச சமூகத்தினர் கவனம் செலுத்த வில்லை என்றும் கவலைப்பட்டார்கள். தமது அரசியல் எதிர்காலத்தைப் பற்றி இவர்கள் பின்வரும் அம்சங்களை வலியுறுத்தினார்கள்.

### 4.4.1 வடமாகாண முஸ்லிம்களுக்கான சுதந்திரமான குரல்.

வடமாகாண முஸ்லிம்களின் கருத்துக்கள் சுதந்திரமாக தேசிய அரசியல் அரங்கில் முன்வைக்கப்பட வேண்டும். இது இக்காலக்கட்டச் சூழ்நிலையில் மிகவும் அவசியமானது எனப் பலரும் வலியுறுத்தினார்கள். வடமாகாண முஸ்லிம்களின் நலன்பற்றி இதுவரையில் ஸ்தாபன ரீதியாக முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் வடமாகாண முஸ்லிம்களின் பெரும்பான்மைக் கருத்தைப் பிரதிபலிக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்கள். ஆகவே வடமாகாண முஸ்லிம்களின் சுதந்திரமான கருத்துக்களை வெளிக் கொணரக்கூடிய தலைமைத்துவமும் அமைப்பும் கொண்ட குரல் அவசியம் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4.4.2. வடமாகாண முஸ்லிம்களுக்கான அமைப்பும் தலைமைத்துவமும்.

வடமாகாண முஸ்லிம்கள் அகதிகளாக்கப்பட்டு ஒன்றரை வருடங்களுக்கு மேலாகியும் இலங்கையில் எந்த ஒரு அரசியல் கட்சியோ, இயக்கமோ, சமூக சேவைச் சங்கங்களோ இவ்வகதிகளின் பிரச்சினையைத் தீர்ப்பதில் அல்லது தீர்க்க முனைவதில் தாக்கமுள்ள அளவு தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை அல்லது அர்ப்பணிக்கவில்லை என்பது மிகத் தெளிவாக இச்சபையில் உணரப்பட்டது.

இதனை நன்குணர்ந்திருந்த மாநாட்டில் கருத்துக்களைத் கூறியோர் ஏன் எமக்கென ஒரு அமைப்பு உருவாக்கப்படக் கூடாது : அவ்வமைப்பு எமது வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தேசிய அரசியல் அரங்கில் ஏன் முன்வைக்கக் கூடாது என்ற கேள்விகளை எழுப்பித் தனியான ஒரு அமைப்பு அமைப்பது பற்றிய எண்ணக்கருவினை முன் வைத்தனர். இம்மாநாட்டில் பேசிய பலரும் தலைமைத்துவ மானது அவசியமான ஒன்றென்றும்; தலைமைத்துவம் இல்லாத சமுதாயம் இலக்கற்ற சமுதாயம் என்றும்; இஸ்லாமிய அடிப்படையில் அமைந்த ஒரு தலைமைத்துவமே மிகச் சரியான ஒரு தலைமைத்துவமாக இருக்க முடியும் நெறியின் என்ற கருத்தினையும் குறிப்பிட்டார்கள்.

அத்துடன் மாநாட்டில் கருத்துரைத்த சகலரும் ஒரு தலைமைத்துவமும், காரியாலயத்தைக் கொண்டு செயலாற்றத் தக்க ஒரு அமைப்பும், இல்லாத குறைபாட்டை சுட்டிக்காட்டத் தவறவில்லை. அவ்வாறான குறைபாட்டினை நிவர்த்தி செய்வதற்கு இது அரியதொரு சந்தர்ப்பம் என்பதனையும் இம்மாநாட்டில் தெரிவித்ததோடு இவ்வகையிலமைந்த தலைமைத்துவத்தினைக் கொண்ட அமைப்பினை உடனடியாக உருவாக்க வேண்டுமென வற்புறுத்தியதோடு அவ்வமைப்புத் தூய்மையான நிலையிலிருந்து கிடைக்கின்ற எல்லா வளங்களையும் பிரயோகித்து எமது அரசியல் பிரச்சினையையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகதிப்பிரச்சினைகளையும் அணுகவேண்டும் என்பதனையும் வலியுறுத்தினர்.

எருக்கலம்பிட்டியைச்சேர்ந்த ஒரு சகோதரர் எமது தலைவிதியை நாமேதான் நிர்ணயிக்க வேண்டும் அதற்காக ஒரு சிறு குழுவினர் அரசியல் ரீதியாகக் கிடைத்த பிரதிநிதித்துவத்தினைக் கொண்டு தாமே முஸ்லிம்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் அதிகாரம் கொண்டவர்கள் என்ற கருத்தில் செயற்பட அனுமதிக்கக் கூடாது என்று கூறினார். இக்கருத்தினை பலரும் வரவேற்றனர்.

இன்னொரு சகோதரர் கட்சிச் சார்பற்ற இவ்வமைப்பு மூலமாகவே எமது தனித்துவமான பிரச்சினைகள் நேரடியாக ஜனாதிபதியின் முன்னிலையிலோ பாராளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையிலோ வைக்கப்படவேண்டும் எனவும் அரசியல் கட்சிகளுடன் எமது பிரச்சினைகளைப் பேசுவதாக இருப்பினும் கூட இவ்வமைப்பின் மூலமே அது நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இன்னுமொரு சகோதரர் வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து நிவர்த்தி செய்வதற்கு ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்ததோடு அக் கோரிக்கையை இவ்வமைப்பினூடே முன்வைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். மற்றுமொருவர் முஸ்லிம் அரசியல்வாதிகள் வடக்கு முஸ்லிம்கள் சார்பாக ஏதாயினும் கருத்துக்களை வெளியிடுவதற்கு முன்னர் அக்கருத்துக்கள் வடமாகாண முஸ்லிம்களைச் சம காலத்திலோ, எதிர்காலத்திலோ பாதிக்குமா ? என்பதனைத் தூர நோக்குடன் சிந்தித்த பின்பே வெளியிட வேண்டும் எனவும் அரசியலுக்காக முஸ்லிம் மக்களைப் பகடைகளாகப் பாவிப்பதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4.4.3 L.T.T.E. யினருடன் வடமாகாண முஸ்லிம்கள் நேரடியாகப் பேசுதல்.

இம்மாநாட்டில் பலர் L.T.T.E. யுடன் ஏன் வடமாகாண முஸ்லிம்களின் பிரதிநிதிகள் நேரடியாக எமது பிரச்சினைகள் பற்றிக் கதைக்கக் கூடாது என்ற வினாவினை முன்வைத்தார்கள். இன்று L.T.T.E யுடன் ஜனாதிபதி, அரசியல்வாதிகள், பௌத்த, கிறிஸ்தவ சமயத் தலைவர்கள் எல்லோரும் சமரசம் பேசுகின்றார்கள். முஸ்லிம்கள் L.T.T.E யினரால் வெளியேற்றப்பட்டவர்கள். எமது சார்பாக எமது நலன்களைக் கவனிப்பதாகக் கூறும் ஏனைய சமூக ஸ்தாபனங்கள் எம்மைப்பற்றியும் எமது நிலைபற்றியும் L.T.T.E. யின் நிலைப்பாடுபற்றியும் நேரடியாகவோ மறைமுகமாகவோ இதுவரை பேசவில்லை. வட மாகாண முஸ்லிம்கள் வெளியேற்றப்படும்வரை தமிழ் மக்களோடு அன்னியோன்னியமாக வாழ்ந்துவந்ததால், எதிர்காலத்தில் வாழ இருப்பதால் நாம் ஏன் எமக்கென ஒரு அமைப்பு மூலமாக நேரடியாக L.T.T.E. யுடன் சமரசம் பேசக்கூடாது !? அதில் என்ன தவறிருக்கிறது ? போன்ற வினாக்களை எழுப்பினார்கள்.

### 4.4.4. வடக்குக் கிழக்கு இணைப்பு அல்லது இணைப்பின்மை பற்றி.

வடக்குக் கிழக்கு இணைப்போ அல்லது இணைப்பின்மையோ வடமாகாண முஸ்லிம்களின் முன்னணியான அடிப்படைப் பிரச்சினையல்ல எனப் பேச்சாளர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைய அரசியலில் மிகவும் முன்னணியில் இருக்கின்ற மாகாண சபைகளுக்கான அதிகாரப்பரவலாக்கம் பற்றி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் S.M. அபூபக்கரின் கட்சிக் கொள்கை விளக்கத்தைத் தவிர வேறுயாரும் இதுபற்றிக் குறிப்பிடவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. எவ்வகையான மன வெளிப்பாட்டை மாநாட்டுக் கருத்துக்கள் காட்டுகின்றன.

மாநாட்டில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களைத் தொகுத்து ஆராய்ந்தபோது வடமாகாண முஸ்லிம்கள் பின்வரும் உள்ளக்கிடக்கைகளைக் கொண்டிருக்கிறார்கள் என்று கருதலாம்.

(அ) பிறந்த மண்ணில் தன்மானத்துடன் சமாதானமாக இன ஐக்கியத்தோடு வாழ்ந்த நாம் கொடூரமான முறையில் உடைமைகள் பறிக்கப்பட்டுச் சொந்தப் பூமியிலிருந்து விரட்டப்பட்டதோடு இன்று நாளாந்தத் தேவைகளுக்குப் பிறரை நம்பி வாழ்கின்றோமே என்ற அங்கலாய்ப்பு.

(ஆ) தமது அகதி நிலைப் பிரச்சினைகளையும் அரசியல் அபிலாசைகளையும் எதிர்காலத் தீர்வையும் இலங்கை வாழ் சகோதர முஸ்லிம்களோ முஸ்லிம் அரசியல்வாதிகளோ, சர்வதேச முஸ்லிம் சமூகமோ சுயநலமற்ற தூய்மையான எண்ணத்துடன் அனுக வில்லையே; உளத்தூய்மையோடு எமக்கு உதவ வில்லையே என்ற பரிதவிப்பு

(இ) எமது சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு ஒன்றரை வருடங்களுக்கு மேலாகியும் எமது எதிர்காலம் இன்னும் நிச்சயமற்ற தன்மையில் காணப்படுகின்றதே: இன்னும் எவ்வளவு காலத்திற்கு இக் கொடூரமான வாழ்க்கையை அனுபவிக்க வேண்டுமோ : எமது இளந் தலைமுறையினரின் எதிர்காலம் சூனியமாகத்தான் இருக்குமோ என்ற பரிதவிப்பு.

## 6. இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமான தேசிய அரசியல் கண்ணோட்டமும், வடமாகாண முஸ்லிம்களுக்கான அரசியல் தீர்வுபற்றிய ஒப்புநோக்கும்.

இன்று இந்நாட்டின் அரசியற் போக்கில் உக்கிரமடைந்து செல்லும் இனப்பிரச்சினைக்கு ஒரு நியாய பூர்வமான தீர்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைய வேண்டும் என்ற இலக்கு மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றது. இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு பிரதேச ரீதியான அதிகாரப் பரவலாக்கலால் அடையப்பட முடியுமா ? என ஆராயப்படுகின்றது. அதிகாரப்பரவலாக்களில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் முக்கிய பிரதேசமாகக் கருதப்படுவதோடு அங்கு வாழும் தமிழ், முஸ்லீம், சிங்கள இனத்தவர்களுக்கு எவ்வகையான அதிகாரப்பரவலாக்கல் முறை பொருத்தமுடையதென்பதும் மிகத் தீவிரமாக சிந்திக்கப் படுகிறது. வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான அதிகாரப் பரவலாக்கலில் வடக்கும் கிழக்கும் இணைந்த பிரதேசத்துக்கு அதிகாரப் பரவலாக்கம் செய்வதா? அதிகாரப்பரவலாக்கற் றிட்டத்தின்போது வடக்கு கிழக்கு மாகாணங்கள் வேறு வேறாக நோக்கப்பட வேண்டுமா ? என்ற வாதப்பிரதி வாதங்களும் சர்ச்சைகளும் எழுந்துள்ளன. முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளும் சமூக நல ஸ்தாபனங்களும், வடக்கு கிழக்கு இணைய வேண்டுமெனச் சிலரும் வடக்கு கிழக்கு இணையக்கூடாது என்ற குரலில் வேறு சிலரும் தமது அரசியல் மதிநுட்பத்தை மக்கள் முன்னும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முன்னும் வைக்கிறார்கள்

நாம் ஆராய்ந்து கொண்டிருக்கும் வடமாகாண முஸ்லிம்களின் எதிர்காலம் பற்றிய மாநாட்டில் முன் வைக்கப்பட்ட கருத்துக்கள் அதிகராப்பரவலாக்கம் சம்பந்தப்பட்ட அம்சத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வில்லை என்பது ஆச்சரியப்படக்கூடிய உண்மையாகும். கருத்துரைத் தோரில் சிலர் வடக்கும் கிழக்கும் இணைவதோ இணையாமல் இருப்பதோ வடமாகாண முஸ்லிம்களின் அடிப்படைப் பிரச்சினையல்ல எனக் குறிப்பிட்டனர். வடக்கில் தாம் குடி யேறும் சந்தர்ப்பம் கிடைக்கும் போது தமக்குப் பாதுகாப்புத் தேவை என்பதை வற்புறுத்தினாலும், அதிகாரப் பரவலாக்கல் பற்றியோ அந்த அதிகாரப் பரவலாக்கலில் வடமாகாண முஸ்லிம்களின் நிலைமை எவ்வாறு அமைய வேண்டும் என்ற கருத்துக்களுக்கோ முன்னுரிமை கொடுக்கப்படவில்லை. முஸ்லிம்களுக்கான அதிகாரப்பரவலாக்கம் பற்றிச் சிறிலங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் காங்கிரஸ் (S.L.M.C) பாராளுமன்றப் பிரதிநிதியான S.M. அபூபக்கர் அவர்கள் கூறிய தமது கட்சிக் கொள்கை விளக்கம்கூட சபையின் கவனத்தை வெகுவாக ஈர்க்கவில்லை.

இன்றைய அரசியல் மையப்பிரச்சினையான பிரதேசங்களுக்கான இனங்களுக்கான அதிகாரப்பரவலாக்கம் என்ற அம்சம் ஏன் மாநாட்டில் கலந்துகொண்ட வடமாகாண முஸ்லிம் பிரதிநிதிகளின் கவனத்தைக் கவரவில்லை ? என்பதை நாம் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். வடமாகாண முஸ்லிம் களின் அரசியல் பிரச்சினையை வேறு ஒரு கண்ணோட்டத்தில் அணுகவேண்டும் என்பதை இது காட்டுகின்றதா ? வடமாகாண முஸ்லிம் மக்களின் மையப்பிரச்சினையும் முன்னுரிமைப் பிரச்சினையும் இன்னும் அடையாளப்படுத்தப்படவில்லை யா ? என்பன போன்ற வினாக்கள் எழுகின்றன. இவ்வினாக்கள் நியாயப்பூர்வமான அடிப்படையைக் கொண்டிருக்கின்றன என்பதை பின்வரும் பகுதிகளில் நாம் அவதானிக்கலாம்.

## 7. வடமாகாண முஸ்லிம்களின் மையப் பிரச்சினை.

மாநாட்டில் சொல்லப்பட்ட கருத்துக்களிலிருந்து வட மாகாண முஸ்லிம்களின் மையப் பிரச்சினைகளை பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்.

வடமாகாண முஸ்லிம்கள் தமது சொத்துக்கள் பறிக்கப்பட்ட நிலையில் வெளியேற்றப்பட்டார்கள். அகதிகளாக மணலிலும் சேற்றிலும் தற்காலிக ஓலைக் குடிசைகளில் நாளாந்த வாழ்க்கைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். நாட்டின் இன்றைய இராணுவ, அரசியல் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு தமது வாழிடங்களுக்கு உடனடியாகத் திரும்பிச் செல்வது சாத்தியமில்லை என்பதனை உணர் கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் L.T.T.E. யின் ஆயுத பலத்தையும் கொடூர தன்மை யையும் நன்கு தெரிந்திருந்த வட மாகாண முஸ்லிம்கள் L.T.T.E. ஆயுத பலத்துடன் இருக்கும்வரை அல்லது ஆயுத பலத்தை இழக்கும்வரை அல்லது சமரச முயற்சி மூலமாக L.T.T.E. யின் அனுமதியைப் பெறும்வரை பரந்தும் தனித்தும் பாதுகாப்பற்றுக் காணப்படுகின்ற தமது வாழிடங்களுக்கு பரந்த ரீதியிலான மீள்குடியேற்றத்தைக் கருத்திலெடுக்க முடியாத நிலையில் காணப்படுகின்றார்கள்.

முஸ்லிம்களின் கண்ணோட்டத்தில் வடமாகாணம் இன்று முஸ்லிம் மக்களற்ற சூனியப் பிரதேசமாகும். அப்பிரதேசத்திற்கு எப்போது செல்லலாம் என்ற நிச்சயமற்ற நிலையில் தமது பாரம்பரிய வாழிடமான வடமாகாணத்திற்கு அதிகாரப் பரவலாக்கம் செய்வது பற்றி அவசரம் அவசரமாக செய்யப்பட்டு வரும் தேசிய ரீதியிலான கலந்துரையாடல்களில் கருத்துச் செலுத்த முடியாத நிலையில் வடமாகாண முஸ்லிம் அகதிகள் காணப்படுகின்றனர். அது போன்றே வடக்கும் கிழக்கும் இணைவது அல்லது இணையாதிருப்பது என்ற வாதப் பிரதிவாதங்கள் அகதி முஸ்லிம்களின் உடனடியான பிரச்சினையல்ல என்பது தெட்டத்தெளிவான உண்மையாகும். ஆகவே இவ்வம்சங்களே வட மாகாணத்திற்கான பிரதேச, இன, அதிகாரப்பரவலாக்கம், வடக்கு கிழக்கு இணைப்புப் பிரச்சினை எனபவற்றில் அகதி முஸ்லிம்கள் அக்கறை கொள்ளாமைக்கு அடிப்படைக் காரணமாகும்.

## 8. வடமாகாண முஸ்லிம்கள் பற்றிய அணுகு முறையில் மாற்றங்கள் வேண்டுமா ?

வாழிட உரிமை மனிதனின் அடிப்படை உரிமையாகும். வாழிட உரிமை ஒரு பிரதேசத்தில் பிறப்பதாலும் அப்பிரதேசத்தில் வாழ்வதாலும் உரித்தாகின்றது. ஒருவனின் வாழிட உரிமை மறுக்கப்படுவது மிகவும் கொடுமையான மனித உரிமை மீறலாகும் இத்தத்துவம் இந்நாட்டின் ஒவ்வொரு பிரசைக்கும் இனக்குழுக்களுக்கும் பொருத்தமுடையதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட மாகாண முஸ்லிம்கள் வாழிட உரிமை மறுக்கப்பட்டு ஆயுத முனையில் வடக்கிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப் பட்டார்கள். இன்று அகதி முகாம்களில் வாழும் இம்மக்களின் நாளாந்தப் பிரச்சினை உணவு, உடை, உறையுள் எனப்பட்டிய லிடப் பட்டாலும் இவையெல்லாம் நிரந்தரமான வாழிட மின்மையாலும், பாரம்பரியமாக வாழ்ந்து வந்த வாழிடம் மறுக்கப்பட்டதாலும் உருவானவையாகும்.

ஆகவே வடமாகாண முஸ்லிம் அகதிகளது பிரச்சினைகளின் மையம் வாழிட உரிமையையும் வாழ்க்கை உரிமையையும் அடியொட்டியதாகக் காணப்படுகின்றது. எனவே இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்காக முன்வைக்கப்படும் (கட்சிரீதியான) அணுகு முறைகள் வடமாகாண முஸ்லிம்களின் வாழிட உரிமை மறுக்கப்பட்டதால் எழுந்துள்ள பிரச்சினை களுக்கு முன்னுரிமை கொடுத்து நோக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

## 9. முன்னுரிமை ரீதியாக வட மாகாண முஸ்லிம் களின் பிரச்சினை.

மாநாட்டுக் கருத்துக்களிலிருந்து வட மாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகளைப் பின்வருமாறு முன்னுரிமைப்படுத்தக் கூடியதாக இருக்கின்றது.

(அ) சீரழிந்து செல்லும் அகதி வாழ்க்கையில் திருப்திகரமான தொரு மாற்றம் அவசியம். இம்மக்களின் இன்றைய வாழ்க்கை கௌரவமாகவும் ஸ்திரமாகவும் இருப்பதற் கான வழிமுறைகள் வகுக்கப்பட வேண்டும். கல்வி, ஆரோக்கியம், கலாச்சாரம் என்பவற்றில் இந்நாட்டின் ஏனைய சக பிரஜைகளைப் போல ஒரு சீரான வளர்ச்சிப் போக்கில் செல்வதற் கான எல்லா நடவடிக்கை களும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(ஆ) இம்மக்கள் தமது தாயகம் (வடமாகாணக்குடி யிருப்புக்களுக்கு) திரும்பிச் செல்வதற்கான அனைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும். அம்முயற்சிகள் இராணுவ நடவடிக்கைகள் மூலமாகவோ அல்லது அரசியல் சமரசப் பேச்சுவார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டதாகவோ, அமையலாம். சமரசப் பேச்சுவார்த்தை என்பது L.T.T.E. யுடனான வடமாகாண முஸ்லிம்கள் கலந்து கொள்ளும் நேரடிப் பேச்சுவார்த்தையாகக் கூட அமையலாம்.

(இ) முஸ்லிம் அகதிகள் வட மாகாணத்தில் உள்ள தமது வீடுகள், கிராமங்கள், வயல்நிலங்கள், வேலைத்தளங்கள் ஆகியவற்றுக்குத் திரும்பிச் செல்லக்கூடிய சூழ்நிலை ஏற்படுகின்றபோது எவ்வாறான அரசியல் அதிகாரப் பரவலாக்கம் செய்யப்படவேண்டும் என்ற கண்ணோட்டத்தில் அரசியல் சீர்திருத்தக் கருத்துக்கள் முன்வைக்கப்படவேண்டும். வட மாகாண முஸ்லிம்களுக்கான இவ்வதிகாரப் பரவலாக்கமானது அம்மக்களின் நாளாந்த வாழ்க்கைக்கும் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் இன ஐக்கியத்துக்கும் எந்தளவு சாதகமாக அமையும் ? என்பதையும் அலசி ஆராய்ந்து பார்ப்பதாகவும் இக்கருத்துக்கள் அமையவேண்டும்.

## மாநாட்டின் இறுதியில் .......

இம்மாநாட்டின் இறுதிக் கட்டத்தில் வட மாகாண முஸ்லிம்களுக்கான ஒரு சுதந்திரமான அமைப்பு ஏற்படுத்தப்படவேண்டும். அவ்வமைப்புக்கான அங்கத்தவர்கள் இம்மாநாட்டிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். என்று பலராலும் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் சபையின் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மாநாடு வட மாகாணத்தில் இருந்து அகதிகளாக்கப்பட்ட முஸ்லிம் பிரதிநிதிகள் எல்லோரையும் உள்ளடக்காதிருப்பதானாலும் வெளிப்படையாகக் கருத்துக்களைக் கூறமுடியாதோருக்கு எழுத்து மூலமாகத் தமது கருத்துக்களைச் சொல்வதற்கு பூரண சந்தர்ப்பம் கொடுக்கப்படவேண்டும் என்பதனாலும், வட மாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகள் இன்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழமாக ஆராயப்பட்டுத் தெளிவு, பெறப்பட வேண்டியிருப்பதனாலும், மாநாட்டில் பங்குபற்றியோர் எதிர்பார்த்த வட மாகாண முஸ்லிம்களுக்கான ஒரு அமைப்பை மற்றுமொரு சந்தர்ப்பத்தில் ஸ்தாபித்துக் கொள்வது சாலப்பொருத்தமானது என சகோதரர் ஒருவர் முன்வைத்த தீர்மானத்தை சபை ஏகமனதாக அங்கீகரித்தது.

## 10. முடிவுரை.

எனவே 1992ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 26ந் திகதி கொழும்பு இஸ்லாமிய கல்வி நிலையத்தில் நடைபெற்ற வடமாகாண முஸ்லிம்களின் எதிர்காலம் பற்றிய மாநாட்டுச் சிந்தனைகளின் தொகுப்பு என்ற இக்கட்டுரை வட மாகாண முஸ்லிம்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றது. பிரசுரமாக இக்கருத்துக்களை வெளிக்கொண்டுவருவதன் முக்கியமான நோக்கம் இம்மாநாட்டில் பங்குகொள்ளாத ஏனைய வட மாகாண முஸ்லிம்களும் தமது கருத்துக்களையும் கூறவேண்டும் என்ற கண்ணோட்டத்தோடும், இவ்வாறான கருத்துக்களின் மூலமாக வட மாகாண முஸ்லிம்களின் பொதுப்பிரச்சினைகள் அடையாளப்படுத்தப்பட்டுத் தேசிய அரசியல் அரங்கில் முன்வைக்கப்படலாம் என்ற நோக்கத்துடனுமாகும். ஆகவே வட மாகாணத்தைச் சேர்ந்த கல்விமான்கள், உலமாக்கள், அரசியல்வாதிகள், ஏனையவர்கள் எல்லோரும் தமது சுதந்திரமான கருத்துக்களை வட மாகாண முஸ்லிம்களின் எதிர்காலம் குறித்துத் தந்துதவுமாறு மாநாட்டு ஏற்பாட்டுக் குழு எதிர்பார்க்கின்றது. அல்லாஹ் இம் முயற்சிக்கு முழுமையான வெற்றியைத் தர வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம்.

## மாநாட்டு ஏற்பாட்டு குழுவின் வேண்டுகோள்.

இது தொடர்பான எழுத்துமூல அபிப்பிராயங்களைத் தர விரும்புபவர்கள் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

**M.S. Anees, Lecturer**
**Department of History and Political Science**
**University of Colombo , Colombo - 3**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible] Lecturer
Department of History and Political Science
University of Colombo, Colombo 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org